# திருமலைத்தீபம்

THIRUMALAI THEEPAM

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் 19
விலை 20/=

ஆவணி இதழ்-2015, ஆரம்பம் 15 மாசி - 2013. திருமறைக்கல்வி நடுநிலையம், இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை. தீபம் - 19



E-mail- catetcota@gmail.com
T.P- 026 2221022, 0263202532


"ஆண்டவருக்கு நன்றியுரைப்பது நன்று" (திபா 92:1)

# புதிய ஆயரின் சிறப்பிதழ்



## புதிய ஆயரின் சிந்தனையிலிருந்து...


- முதலில் ஆன்மீகத்தில் நாம் வளர வேண்டும். ஆன்மீகத்தில் எமக்கிருக்கும் வளர்ச்சி சமூகத்தில் பாரிய மாற்றத்தை உருவாக்கும்.
- முதலாவது எமது மக்களை நாம் அறிந்திருக்க வேண்டும். ஆயன் தன் மந்தையை அறிவது அவசியம். இவ்வாறு நாம் பணிசெய்ய எமக்குத் தரப்பட்டுள்ள மக்களை அறிந்து அவர்களது தேவைகளைக் கருத் திற் கொண்டு எம்மை அர்ப்பணித்தால் மக்களை வாழ்வில் உயர்த்தலாம்.
- மறைக்கல்விப் பணி ஒரு மறைமாவட்டத்தின் மிகவும் முக்கியமான பணி. அது இறைவாக்குப்பணி. இறைவார்த்தையை ஒவ்வொரு தரப்பினரையும் கவரக்கூடிய வகையில் கொடுப்பது அனைவருடைய கடமை. பங்கில் ஒவ்வொரு குருவும் முதன்மை மறையாசிரியர். இப்பணியைச் செய்ய எமக்குத் தேவையான கட்டட வசதி உண்டு. அனுபவம் பெற்ற பணியாளர்கள் உள்ளனர். அர்ப்பணம் நிறைந்த மறையாசிரியர்கள் உள்ளனர். இந்த வளங்களை நாம் முறையாகப் பயன்படுத்தினால் இறைவாக்குப் பணியில் நிறைய சாதிக்கலாம்.
- வரவிருக்கும் காலங்களில் குருக்களோடும், துறவறத்தவர், பொதுநிலையினரோடும் கலந்தாலோசித்து ஆக்கபூர்வமான திட்டங்களை வகுத்துச் செயற்பட எண்ணியுள்ளேன். மறைமாவட்டத்திற்கென என்னிடம் பல திட்டங்கள் இருந்தாலும் அது **எனது** திட்டமாகச் செயல்படுத்த விரும்பவில்லை. இது **எமது** திட்டமாக குருக்கள், துறவறத்தவர் பொதுநிலையினரிடமிருந்து வரும்போது அது பயனுள்ளதாக அமையும் என்பது எனது நம்பிக்கை. இதனால் எந்த திட்டங்களையும் தற்போது அறிவிக்க விரும்பவில்லை.

## புதிய ஆயரின் திருப்பொழிவு நிகழ்வு

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்"

உலகப் பொதுமறையாம் திருக்குறளில் காணப்படும் ஒரு குறளாகும். இக்குறளானது இன்று கூறப்படும் விடயத்துக்குப் பெரிதும் பொருத்தமானது.








தொடர்ச்சி பக்கம் 05

# புதிய ஆயரின் பதவியேற்பு நிகழ்வு





26.07.2015 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 04.30 மணிக்கு தூய மரியாள் கல்லூரி மாணவர்களின் வாத்திய இசை மூலமும் சிறார்களின் நடனத்தோடும் தூய மரியாள் பேராலய பங்குத்தந்தை பங்கு மக்களாலும் தூய மரியாள் வீதியிலிருந்து புதிய ஆயர் அதி. வந். கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களும், ஓய்வு பெற்ற ஆயர் அதி. வந். யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும், புதிய ஆயரின் குடும்ப உறுப்பினர்களும் வரவேற்கப்பட்டார்கள்.

தொடர்ச்சி பக்கம் 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நீரோ ஆண்டவரே என்றுமே உயர்ந்தவர்' (திபா 92: 8)

# உங்களோடு பேசுகிறேன்..

**அருட்பணி N.C அருள்வரதன்**

புதிய மாதம் தொடங்கியுள்ளது. இம் மாதத்திலும் உங்களோடு பேசுவதற்கு எனக்கு ஒரு வாய்ப்பு.

நமது மறைமாவட்டத்திற்கென புதிய ஆயராக அதிமேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை தெரிவு செய்யப்பட்டு விட்டார். இதன் நிகழ்வுகள் அனைத்துமே மிகவும் சிறப்பாக நிகழ்ந்துள்ளன. நாட்டின் அனைத்து மறைமாவட்ட ஆயர்கள், தலைமை ஆயர் குருக்கள், அருட்சகோதர சகோதரிகள் குருமட மாணவர்கள், நண்பர்களென பெருந்திரளானவர்கள் இதிலே கலந்து சிறப்பித்தார்கள்.

புதிய ஆயர் பணியினை ஆரம்பித்து விட்டார். புதிய ஆயரின் பணியானது இறைவனின் வழிகாட்டலோடு இறைவனின் துணையோடு, இறைவனின் அறிவுறுத்தலோடு பயணிக்க நாம் அனைவரும் புதிய ஆயருக்காகவும் அவரது பணி வாழ்விற்காகவும் இறைவனை வேண்டுவோம்.

அதேவேளை ஆயர் பணியிலே 32 ஆண்டுகளை நிறைவு செய்து ஓய்வு பெற்றுள்ள மேதகு ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களையும் அவரின் பணிகளையும் நாம் மறந்துவிட முடியாது பொறுப்பேற்ற காலம் யுத்த அனர்த்தங்கள் பெருகிக்கிடந்த நேரங்கள் அமைதி ஆறுதல் எங்குமே இல்லாமல் சிதறிக்கிடந்த காலங்கள் எல்லா நிலைகளையும் காலங்களையும் கடினங்களையும் கடந்து ஓய்வு பெற்றுள்ள எமது ஆண்டகையின் பணியினை எவருமே மறக்க மாட்டார்கள். தொடர்ந்தும் இறைவனின் துணையோடு அவரது செயற்பாடுகள் அமைய ஆண்டகைக்கு நன்றிகள் கூறி மன்றாடுவோம்

நாட்டினை நோக்கும் போது தேர்தல் சூடுபிடிக்கத் தொடங்கி விட்டது ஏட்டிக்குப் போட்டியாக ஒவ்வொரு குழுவினரும் சரமாரியாகக் கொட்டித் தீர்க்கிறார்கள் எது எப்படி என்றாலும் பொருத்தமானவர்கள் தெரிவாக வேண்டும். ஏற்றவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் நல்லாட்சி அமைய வேண்டும். நாட்டிலே புரையோடி கிடக்கின்ற குறைபாடுகள் குறிப்பாக வறுமை அமைதி அற்ற நிலை அடக்குமுறைகள் மறைந்தொழிந்து அனைத்து மக்களும் அன்போடும் சமாதானத்தோடும் பேதங்களின்றி வாழும் பாக்கியமான நிலைகளை புதிய ஆட்சியிலே காண்பதற்கு இறைவன் துணைபுரிய வேண்டுமென்று வேண்டி நிற்போம் எனக் கூறிக்கொண்டு மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக் கூறிநிற்கின்றேன்.

## அறிந்த குருவும் அறிந்திராத குருவும்

**அருட்பணி சவிரி விக்ரன் அவிதப்பர் அடிகளார்**

சென்ற இதழின் தொடர்ச்சி.....

குருவாக அவரை அபிஷேகம் செய்ய பலியின் ஆரம்பத்தில் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களே அடிகளாரின் இறுதித் திருப்பலியையும் நிறைவேற்றியது இன்னும் வேதனை தருகின்றது. அத்திருப்பலியின் ஆரம்பத்தில் ஆயர் தவறுதலாக “அருளாளர் அவிதப்பர்”... என்று கூறியது வேதனையில் அழுது கொண்டிருந்த எங்கள் அனைவருக்கும், வேதனையிலும் மகிழ்ச்சி தரும் விடயமானது.

ஆம், அவர் தம் வாழ்நாளெல்லாம் அருளாளராகவே வாழ்ந்தார், என்றும் அருளாளராகவே இருப்பார். ஒரு குருவின் இழப்பு ஈடு செய்ய முடியாத ஒரு விடயமாகும். அதிலும் அருட்பணி சவிரி விக்ரன் அவிதப்பர் போன்ற தூய குருக்களின் இழப்பை ஈடுசெய்ய முடியாது. எனினும் அவர் கடவுளின் சந்நிதியில் எமக்காகப் பரிந்து பேசுவோரின் மத்தியில் ஒருவராக இப்பொழுது இருக்கிறார் என்ற நம்பிக்கை எங்கள் உள்ளத்திலே உறுதியாக இருக்கின்றது. அதற்கு அவர் வாழ்ந்த நல்வாழ்வும், அவர் செய்த நற்பணிகளும், அவருக்காகச் சிந்தப்பட்ட எம் கண்ணீருமே சாட்சிகள். அருட்பணி அவிதப்பரின் ஆன்மா என்றென்றும் இறைவனில் இளைப்பாறக் கடவதாக!

**ஆமென்! ஆமென்!**

**அருட்பணி சீ.றோ. ஜெயரெத்தினம்**

# திருகோணமலை மறைமாநிலச் செய்திகள்

## பன்குளம் தூய அந்தோனியார் ஆலய புனருத்தாரனம்

பன்குளத்தில் அமைந்துள்ள தூய அந்தோனியார் ஆலயத்தில் கடந்த 30 வருடங்களின் பின்பு 2015.06.30ம் திகதி அன்று அருட்பணி L.பிலிப் அடிகளார் அவர்களால் முதன் முதலாக திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. சுமார் 1965ம் ஆண்டளவில் உருவாக்கப்பட்ட தூயஅந்தோனியார் ஆலயமானது சிறிய குடிலாக உருவாக்கப்பட்டு மெல்ல மெல்ல கட்டிடமாக உருவெடுத்து வரும் நிலையில் அருட்தந்தையர்களான அன்னை மேரிதாஸ், ஜெரமியாஸ், அரசரெட்ணம், கிறிஸ்டி கனகநாதன் போன்றவர்களினால் வளர்ந்து வந்து 1984ம் ஆண்டின் வன்செயலின் நிமிர்த்தம் மக்கள் இடம் பெயர்ந்த நிலையில் ஆலயமும் அனாதரவாகிவிட்டது.

கிறிஸ்தவ குடியிருப்புகள் இல்லாத நிலையில் ஆலய கூரைகளும், ஜன்னல் கதவுகளும் சூரையாடப்பட்டுக் கட்டிடம் மட்டும் அனாதரவாகிய நிலையே இப்போது காட்சியளிக்கிறது.

கடந்த ஒருசில வாரங்களாகத் தனது தனி முயற்சியின் மூலம் சில உதவிகளோடு அருட்பணி L. பிலிப் அவர்களது முயற்சியில் சூழவுள்ள காடுகள் துப்பரவு செய்யப்பட்டு தற்போது ஒவ்வொரு செவ்வாய்க் கிழமைகளில் மாலை 05.00 மணிக்கு செபமாலை ஆராதணையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படுகின்றது.

பன்குளம் வாழ் கிறீஸ்தவ மக்களையும் ஒவ்வொரு செவ்வாய் திருப்பலி ஆராதணையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறார் அருட்தந்தை அவர்கள்.

மேலும் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் அனுமதியுடனும், ஆதரவுடனும் யூலை 16ம்,17ம்,18ம் திகதிகளில் ஆராதணை நடைபெற்று 19ம் திகதி திருவிழா திருப்பலி நடைபெற தகவல் ஒழுங்குகள்மேற் கொள்ளப்பட்டுள்ளன.

**றேமன் சோதி ஜெரோம்**
**தி/விபுலானந்தா அதிபர்**

## உண்மைச் சம்பவம்
## சதா சகாயத் தாயே...

தாயின் அன்பு வற்றிப் போகுமோ
தனது பிள்ளை அவள் மறப்பாளோ
என்றும் மறவாமல் இருக்கும் எமது தாயானவள்
சதா சகாய அன்னை, என்றும் எமக்குச் சகாயம் கொடுக்கும் வள்ளலே. அன்னை மீது நம்பிக்கை வைத்து மன்றாடினால் நிச்சயம் கிடைக்கும் நன்மைகள். சதா சகாய அன்னையைப் பற்றி ஒரு வார்த்தை

நானும் எனது நண்பர் மூவரும் வேலை தேடும் வயதில் எல்லா இடங்களிலும் அலைந்து திரிந்தோம். எனது அப்பா, அம்மா இருவரும் சதா சகாய அன்னையின் நவநாளில் தொடர்ந்து பங்கு கொள்ளுங்கள். இந்த வேண்டுகோளை முன்வைத்து நிச்சயம் கிடைக்கும் என்றனர். நானும் எனது நண்பர் இருவரும் அதனை ஏற்று ஒவ்வொரு புதன்கிழமை தோறும் மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகும் நவநாள் திருப்பலிப் பூசையில் பங்கு பற்றினோம்.

3வது புதன்கிழமை இரண்டாவது நண்பர் கொட்பிறீ கடுமையான காய்ச்சல் காரணமாக எழும்ப இயலாத நிலையில் இருந்தார். அதனால் அன்று அவரால் திருப்பலியில் பங்கு கொள்ள முடியவில்லை. 5வது கிழமை மற்றொரு நண்பர் லீனஸ் வாயில ஏற்பட்ட வருத்தம், கடுமையான காய்ச்சலால் கதைக்கக் கூட முடியாத நிலை அவரும் அன்றைய நாளில் சமூகமளிக்க முடியவில்லை. ஏழாவது கிழமை எனக்கு காய்ச்சலும் உடல் நோவுமாக இருந்தது. ஆனால் இயலாத நிலையிலும் நவநாளிலும், திருப்பலியிலும் கலந்து கொண்டேன்.

இப்படியான சந்தர்ப்பத்தில் ஒன்பதாவது திங்கட்கிழமை அன்று தொழில் திணைக்களத்திலிருந்து கடிதம் ஒன்று வந்தது. அதில் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதே புதன்கிழமை நேர்முகப் பரீடசை நடைபெறவிருந்தது. நேர்முகப்பரீட்சையில் கலந்து கொண்டேன், ஒருவருக்கான வெற்றிடத்துக்கு 48 பேர் கலந்து கொண்டனர். என்ன ஆச்சரியம்! நேர்முகப் பரீட்சையில் நானே தெரிவு செய்யப்பட்டிருந்தேன். சதா சகாயத் தாய் என்னைக் கைவிடவில்லை.

அதனைத் தொடர்ந்து சில நாட்கள் மட்டுமே நவநாள் திருப்பலிக்கு என்னால் செல்ல முடிந்தது. வேலைப்பளுவினால் என்னால் தொடர்ந்து செல்ல இயலவில்லை. இருப்பினும் நான் மாதாவின் நவநாளைக் கைவிடவில்லை. தொடர்ந்து வீட்டிலேயே சொல்லி வந்தேன் பின்னர் படிப்படியாக என் வாழ்வில் பதவியுயர்வும், திருமணமும் நடைபெற்றது. இவவிரண்டு செயல்களும் புதன்கிழமையே நடைபெற்றமை இன்னும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

சதா சகாய அன்னை என் வாழ்வில் ஆதாரமாக இருப்பது போன்று வளரும் சமுதாயமும் சதா சகாய அன்னையின் பக்தியை வளர்த்து அன்னையின் ஆசீர் பெற மன்றாடுவோமாக.

திரு. சி. அந்தோனிப்பிள்ளை
உவர்மலை

## மண்ணின் மைந்தன்

ஆவியானவரின் துணையோடு
அன்று மரியாள் இம்மானுவேலை
உத்தமனாக மாட்டுத் தொழுவத்தில்
பெற்றார்

ஆனால் அதே நாளில் உம் அன்னை
இம்மானுவேலின் கருவை
திருமலை மண்ணிலே பெற்றார்

அன்று மரியாள் தம் மைந்தனின்
அற்புதங்களைக் கண்டு மகிழ்ந்தாள்
ஆனால் இன்று உம் அன்னை
இறைவன் உமக்க கொடுக்கும்
ஆசிகளை கண்டு மகிழ்கிறார்

உம் அன்னை கண்முன்னே
திருமலை மண்ணிலே பிறப்பு படிப்பு
குருத்துவ வாழ்வு ஆயர் பட்டம் என
உம் செப தபங்கள் உம்மை
உயர்த்தி போற்றுதே ஐயா

இன்று உமது சாந்தமான
நிலையைக் கண்டு எல்லா
மனங்களும் உம்மை
ஆசீர்வதிக்கின்றதே உம் ஆயர் பணி
சிறப்படைய
வேண்டும் என்று வாழ்த்தி
உம் வரவை வேண்டி நிற்கிறோம்
உம் சேவை தொடரட்டும்
திருமலை மண்ணிற்கே

மனோஜ் குமார் ஜெக்குலின் சுகந்தினி
பேராலயம்

**வாசகர்களே!**

உங்கள் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள், பங்கின் செய்திகளையும் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்பு எதிர்ப் பார்க்கின்றோம். அவற்றை **திருமலைத் தீபத்திற்கு** அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு:** பங்கு சார்ந்த செய்திகளை பங்குத்தந்தையின் அனுமதியுடன் அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி :- ஆசிரியர்
திருமலைத் தீபம்
297, டொக்கியாட் வீதி,திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்ப்பு

அருட்பணி N.C அருள்வரதன்

- வன்முறைகள் மறைந்து நாட்டில்
  அன்புறவைத் தோற்றுவிக்க
  நல்லாட்சி அமையும் போது
  நலம் பெறுமே நாடதனால்
- தேர்தல் களங்களின்று
  கொட்டும் மொழிகள் பல
  சொன்னவைகள் செயலானால்
  சொர்க்கபுரி ஆகுமே நம்நாடு
- சொன்னவர்கள் சொன்னற்றை
  சொன்னபடி செய்வார்களா?
  இதுவே மக்களின் மனங்களை
  மாசடையச் செய்கிறதே
- பதவி ஆசை கொண்டவர்கள்
  பணியினை ஆற்றவே முடியாது
  மக்கள் விரும்பித் தெரிபவரே
  மக்களின் பணியாளராய் வரவேண்டும்
- வன்முறைகளற்ற தேர்தல் மூலம்
  நல்லாட்சி அமைந்திட வேண்டும்
  நலமான நிலைகள் நாட்டினிலே
  நல்லாட்சியால் காண வேண்டுவோமே

## பிரரன்சிஸ்கன் சபை பற்றிய ஒரு பார்வை...

பிரான்சிஸ்கன் சபை 1209ம் ஆண்டு தூய பிரான்சிஸ் அசீசி அவர்களால் தொடங்கப்பட்டது. பிரான்சிஸ்கன் முதலாம் சபை, இரண்டாம் சபை, மூன்றாம் சபை என மூன்று பெரிய பிரிவுகளை கொண்டுள்ளது. உலக அளவிலே அதிகப்படியான குருக்களும், துறவியர்களும், பொதுநிலையினரும் தூயபிரான்சிஸ் அசீசியின் சட்ட திட்டங்களை தங்கள் வாழ்க்கை முறையாக ஏற்று வாழ்கிறார்கள்.

பிரான்சிஸ்கன் முதலாம் சபையிலே ஒரு பிரிவு சபையாக உருவெடுத்தது தான் பிரான்சிஸ்கன் கப்புச்சின் சபை. பிரான்சிஸ்கன் துறவியயாக இருந்த **"மேத்யூ பாஸியோ"** என்பவரால் 1520ம் ஆண்டு பிரான்சிஸ்கன் கப்புச்சின் சபை தொடங்கப்பட்டது.

தூயபிரான்சிஸ் அசீசியின் விழுமியங்களை, வாழ்க்கை நெறிமுறைகளை முழுமையாக எவ்வித மாற்றமுமின்றி கடைப்பிடிப் பதற்காகவே கப்புச்சின் சபை தொடங்கப்பட்டது. கப்புச்சின் சபை 1528ம் ஆண்டு திருத்தந்தை 7ம் கிளமண்ட் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

பிரான்சிஸ்கன் கப்புச்சின் துறவிகள் உலகின் பல்வேறு நாடுகளிலே இறைபணியும், மறைபரப்புப் பணியும் செய்து வருகின்றார்கள். கப்புச்சின் துறவிகள் தாம் வத்திக்கான் நகரிலே அதிகாரப்பூர்வமாக திருத்தந்தையர்களுக்கு மாதாந்த தியானங்களை வழிநடத்துவது, திருத்தந்தையர்களுக்குப் பாவமன்னிப்பு, திருவருட்சாதனங்களை நிறைவேற்றுவது போன்ற பணிகளை செய்து வருகிறார்கள்.

இலங்கை நாட்டிலே தமிழ் மக்கள் வாழக்கூடிய பகுதிகளிலே மறைபரப்புப் பணிக்காக இந்தியாவின் **"மரியாள் அமைதியின் அரசி"** தென் தமிழக கப்புச்சின் மறை மாநிலத்திலிருந்து 3 அருடதந்தையர்கள் வருகை புரிந்திருக்கிறார்கள்.

- "மன்னார் மறைமாவட்டம் - தரணிக்குளம் பங்கின் பங்குத்தந்தையாக அருட்தந்தை பீட்டர் அமல்ராஜ் பணியாற்றுகிறார்.
- "திருகோணமலை மறைமாவட்டத்தில் முதல் முறையாக இந்த ஆண்டு
- தூய மரியன்னை பேராலயத்தில் உதவிப் பங்குத் தந்தையாக அருட்தந்தை அலெக்ஸ் மரிய செல்லையா அவர்களும்,
- பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தலத்தில் உதவிப் பங்குத் தந்தையாக அருட்தந்தை அந்தோனி ஆரோக்கிய சாமி அவர்களும் பணியாற்றி வருகிறார்கள்.

# மறைமாவட்டப் பாதுகாவலர் தூய லொயலா இஞ்ஞாசியார். இயே.ச.

சென்ற மாத தொடர்ச்சி..

**அருட்பணி ஆஞ்சலோ பொன்னையா. இயே.ச.**



இனிகோவின் வீரத்தைக் கண்டுவியந்து நின்றனர் ஸ்பானிய படைவீரர்கள். கைதியாக சிறைக் கூடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டிய அவரை சித்திரவதை ஏதும் செய்யாமல் கண்ணியமாக நடத்தினர். 15 நாட்கள் தங்களோடு தங்கவைத்து தக்க சிகிச்சை அளித்து ஒரு பல்லக்கில் வைத்து அவரை லொயலா மாளிகைக்கு அனுப்பிவைத்தனர்.

## லொயலாமாளிகையில் இனிகோவின் மனமாற்றம்:

எதிரிகளால் கண்ணியமாக நடத்தப்பட்டு லொயலா மாளிகையை அடைந்த இனிகோவிற்கு மருத்துவர் பலர் வந்து சிகிச்சையளித்தனர். முழங்காலிலே புடைத்துக் கொண்டிருந்த எலும்பொன்றினை வெட்டி அகற்றினாலன்றி அவரால் சுயமாக நடக்க முடியாது. கால் ஒன்று குட்டையாகவே இருக்கும், நொண்டி, நொண்டி நடக்க நேரிடுமென மருத்துவர்கள் கூறினார்கள். அத்துடன் மயக்க மருந்து வசதிகள் இல்லாத அக்கால கட்டத்தில் சத்திர சிகிச்சை செய்வது நோயாளிக்கு தாங்க முடியாத வலியைக் கொடுக்கும் எனும் அபிப்பிராயத்தையும் தெரிவித்தனர்.

கால் குட்டையாக இருந்தால் இராணுவ உடையை அணிய முடியாது, உடல் கவர்ச்சியும் குறைந்து போகும், பெண்கள் தன்னை இரசிக்க மாட்டார்களே என பல்வேறுபட்ட எண்ணங்கள் இனிகோவின் உள்ளத்தில் உதிக்கவே வலியையும் பொருட்படுத்தாது சத்திர சிகிச்சைக்கு (ஒரு முறையல்ல மூன்று முறை) இணங்கினார். அரத்தினால் எலும்பை அறுத்தனர். வீர உணர்வோடும் பொறுமையோடும் இந்த சத்திர சிகிச்சையைத் தாங்கிக் கொண்டார்.

## இனிகோவின் இதயத்தைத் தொட்ட இயேசு மற்றும் புனிதரின் வாழ்க்கை வரலாறு:

சத்திர சிகிச்சையின் பின் பல மாதங்கள் படுக்கையிலே முடங்கிக் கிடக்க வேண்டிய பரிதாப நிலை இனிகோவிற்கு நேரமோ பாரமாக நீண்டது.

நேரத்தைப் போக்குவதற்காக உணர்வுகளைத் தூண்டும் காதல் கதைகளையும் வீரதீரச் செயல்களை விளக்கும் சாகசக் கதைகளையும் படிக்க ஆவல் கொண்டார். ஆனால் அம் மாளிகையில் இரண்டு புத்தகங்களே இருந்தன. ஒன்று இயேசுவின் வாழ்க்கை வரலாறு மற்றொன்று புனிதர்களின் வாழ்க்கை வரலாறு. இவ்விரு புத்தகங்களும் இனிகோவின் சகோதரரின் திருமண நாளிலே அவரின் மனைவிக்கு பேரரசி இசபெல்லாவினால் அன்பளிப்பாக அளிக்கப்பட்டவை என தெரிய வருகிறது. வேண்டா வெறுப்போடு அவற்றை மேலோட்டமாக வாசிக்க ஆரம்பித்தார். படிக்கப் படிக்க உள்ளத்திலே உவகை மனதிலே மாற்றம். புனிதர்கள் குறிப்பாக சாமிநாதர், ஆசீர்வாதப்பர் போன்றோர் தமது வாழ்க்கையை இறைவனுக்கு அர்ப்பணிக்க முடியுமென்றால் அவர்களைவிட அதிகமாக ஏன் தன்னால் முடியாதென்ற கேள்விகள் எழுந்தன. இதுவரை தன் வாழ் நாட்களை வீணாக்கி விட்டோமே என்ற ஆதங்கம் உள்ளத்தை ஊடுருவியது. மண்ணுலக அரசுக்குத் தளபதியாக விளங்கிய நான் **"அரசரக் கெல்லாம் அரசர், ஆண்டவர்க கெல்லாம் ஆண்டவர்"** இயேசுவின் வீரத் தளபதியாக மாறவேண்டுமென உறுதி பூண்டார்.

## மனதினை அலைக்கழித்த மாற்று சிந்தனைகள்:

இயேசுவின் தளபதியாக மாற வேண்டு மென்ற உறுதி உள்ளத்திலே தோன்றிய போது இரண்டு வகையான சிந்தனைகள் அவரது உள்ளத்திலே உருவாகின.

இனிகோவின் கனவுக் கன்னியாக விளங்கியவர் பேரரசர் சார்ள்ஸின் தங்கையான கத்தரின் சீமாட்டி. இவ் உயர்குல சீமாட்டிக்காக வாழ வேண்டும், அவளிடம் பேசும் பொழுது எவ்வகையான கவர்ச்சியான வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும், எத்தகைய வீரதீரச் செயல்களைச் செய்து அவளைக் கவர்வது என்பது முதலாவது. இயேசுவுக்காக வாழ்வது தவ வாழ்க்கை மேற்கொள்வது, அவரது அதி உன்னத மகிமைக்காகவும் பிறர் நலம் பேண தனது வாழ்க்கையை அர்ப்பணிப்பது என்பது மற்றொன்றாகும். முதல் எண்ணம் வந்து மறைந்த பிறகு அவரது உள்ளத்திலே ஒரு வகையான கலக்கம், குழப்பம். இரண்டாவது எண்ணம் உள்ளத்திலே உதித்தபோது ஆழ்ந்த அமைதி, தெளிவு. இவைதான் பிற்காலத்தில் இன்னாசியார் தனது ஆன்மீகப் பயிற்சிகளில் குறிப்பிட்டுள்ள **"உள்ளத்திலே எழும் எண்ணங்களை ஆவி அரசர் துணையோடு உய்த்துணரல்"** Discernment of the Spirit என்பதற்கு அடித்தளமாக அமைந்தது எனக் கூறலாம். இறுதியாக ஓர் முடிவுக்கு வந்தார். எருசலேம் நகருக்கு வெறுங்காலோடு நடந்து பிச்சையெடுத்துச் செல்ல வேண்டும். இயேசு பதித்த பாதச் சுவடுகளைக் கண்டு முத்தமிடுவது என்பதேயாகும். இவ் வேளையில் அன்னை மரியாள் குழந்தை இயேசுவோடு அவருக்குக் காட்சியளித்தார். இக் காட்சி அனுபவங்கள் இனிகோ தனது வாழ்நாள் முழுவதும் கற்புக்குப் பிரமாணிக்கமாக வாழ்வதற்கு ஊன்று கோலாக அமைந்தது எனலாம்.

## புதிய ஆயருக்கு! வாழ்த்துச் சொல்லுங்கள் வாழச் சொல்லுங்கள்...

**"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றிலும் தோன்றாமை நன்றன்று"** (தி/குள் 236)

பொய்யா மொழியின் கூற்றுக்கமைய
பொய்யான வாழ்வைத் துறந்து
துறவறமே! துணையெனக் கொண்டு
துயிலாது! மெய்வருத்தம் பாராது! பசி நோக்காது!
இறைபணியே! தம் பணியென
இன்புற்றே செய்து முடிப்பார்!

பேராலய தூய மரியாள் பகுதியிலே "மகுடத்திற்கு தெரிவானார்"
ஜோக்கிம் இம்மானுவேலுக்கும், டெனேற்றா மேசிக்கும் மகனாய்
விசுவாசத்தின் வித்தாய் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
விளைந்தது "சிறிய, பெறியகுருமடம் கண்டி சிங்காரத் தோட்டமதில்"
இவரிடம் நிறையப் பொக்கிஷங்கள் உள்ளன.
இரக்கம், தயவு, தாழ்ச்சி, தன்னடக்கம்,கற்பு

பொறாமை கொண்ட - சாத்தான்
பொக்கிஷத்தை கொள்ளையடிக்க
பெருமனம் கொண்ட மனித குலத்திடம்
பேரம் பேசுகின்றான் - சாத்தான்
அருட்பணி அகவை இருபத்தொன்பதிலும் அவர் கூற்று
அவரது மிதியடி வாரை அவிழ்க்கக்கூடத் தகுதியில்லை
(யோவான் 1:27-28)

பொருள் வாழ்வு இல்லையானால் - இந்தப்
பூவுலகே புலர்ந்திடாது - நமக்கு
அருள் வாழ்வு இல்லையானால்
அவ்வுலகம் இருந்திடாது - இவருக்கு
நற்கதி சேர வேண்டின் இப்புவிதனில்
நற்பணி புரிந்திட்டார்

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"** (தி/குள் 50)

**வாழ்த்துச் சொல்லுங்கள்... வாழச் சொல்லுங்கள்**

ஆக்கியோன் அ. குமார், கொரேயிரா
பேராலயம்

## குட்டிக் கதை


Fr.NC

பலவற்றை எழுதிய பேனாவுக்கும் பலவற்றை வெட்டிக் கொட்டிய கூரிய வாளுக்குமிடையே வாக்குவாதம் "யாருக்கு கூர்மை" அதிகம் பேனாவுக்கா? இல்லை கூரிய வாளுக்கா? வாள் கூறியது எத்தனை உயிர்களை எனது கூரிய நிலையால் அழித்தொழித்துள்ளேன். எனது கூர்மையோடு உனது கூர்மையை எப்படி ஒப்பிடலாம்". சிரித்தபடி கூறியது கூரிய வாள். அதற்கு பேனா சொன்னது "உண்மைதான் ஆனால் உன்னால் செய்யப்பட்ட அத்தனை வெட்டு வேலைகளையும் வெளியே கொண்டுவருவது எனது கூரிய நிலைதான் மறுக்க முடியுமா? கூரிய வாளைவிட பேனா கூரியதென்பது உண்மைதானே மறுக்கிறீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமிதத்துடன் நன்றி நவில்வோம்

**'நல்ல ஆயர் தன் ஆடுகளை அறிவார் அவையும் அவர் குரலுக்கு செவிசாய்க்கும்'**



மனித வாழ்வின் நிலையானது பரந்து விரிந்தோடி, பாய்ந்து செல்லும் அருவியைப் போன்றது. எவ்வாறு இலக்கு நோக்கி ஓடும் அருவியானது கற்கள், முட்கள், பயிர்கள் எனப் பலவற்றை ஈரமூட்டி, பல தடவைகளைத் தாண்டி பலரின் தாகம் தணித்து ஈற்றில் சமுத்திரத் தாயின் அணைப்பிற்குள் கடந்து தனது இலக்கை அடைகிறது. இதனைப் போன்று தான் நம் பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய எமது ஆயர் பேரருட்திரு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் குருத்துவ அருவியாக ஆரம்பித்து. பரந்து ஆயனாகப் பல சாதனைகளைப் படைத்து பல சவால்களை எதிர் கொண்டு பலரை வளமூட்டி, வாழ்வளித்து ஓய்வு நிலையை அடைகின்றார்

**"நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்."** என்றார். நம் இயேசு (யோவா. 15:16) இவ்வார்த்தைக் கேற்ப கடந்த 07.05.1983 முதல் திருகோணமலை மட்டக்களப்பு மறைமாநிலத்தைப் பொறுப்பேற்று கடந்த 30 வருடங்களுக்கு மேலாகவும் கடந்த 3 ஆண்டுகளாக எமது திருகோணமலை மறைமாவட்டத்தையும் வழிநடத்தி தமது ஆயர் பதவி நிலையில் இருந்து ஓய்வு பெறுகிறார். எமது ஆயரைப் பற்றியும், அவரது சேவைகள் பற்றியும் எண்ணும் போதும் பெருமிதப்படுவதோடு நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளோம்.

மறைமாநில மக்கள் மட்டுமல்ல யாரும் அவரை எந்த வேளையிலும் சந்திக்க முடியும். அவ்வாறு வருவோரை விருந்தோம்பி அன்புடனும் ஆதரவுடனும் உரையாடி அவர்களது தேவைகளை இயன்றளவு உதவி வழிகாட்டும், பண்பும், சிறப்பும் அவருக்கே உரியது எனலாம்.

எமது மறைமாவட்டத்திற்கு அவர் செய்த அரும் பணிகள் ஏராளம் இருப்பினும் ஒரு சலவற்றை நினைவு கூருவது இச்சந்தர்ப்பத்தின் தேவையாகும். 1983 தொடக்கம் 2009 வரையான காலப்பகுதியில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தம், இனக்கலவரங்கள் நாம் அழியாத வடுக்களாக உணர்வுகளில் தாங்கி வைத்திருக்கின்றோம். மூவின மக்களும் செறிந்து வாழும் பகுதியில் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரங்கள் அரசியல் நெருக்கடிகள் குருக்கள் முதல் பொதுநிலையினரின் படுகொலைகள, ஆட்கடத்தல்கள் போன்ற துன்பங்களில் இனமத வேறுபாடின்றி ஆதரித்து, வழிநடத்தினார் நம் ஆயர். இதைப்போன்று புயல், சூறாவளி, சுனாமி வெள்ளப்பெருக்குப் போன்ற இயற்கை அனர்த்தங்களிலும் தமது குருக்கள், துறவியர், பொதுநிலையினர் மூலம் மக்களை வழிநடத்திய நம் ஆயரை நாம் மறந்து விட முடியாது. அனைவரும் துன்பங்களைக் கடந்து விசுவாசத்துடன் வழிநடக்க ஆன்மீக வாழ்வையும் நெறிப்படுத்திய உயர்ந்த மனிதர் அவர்.

பொது விழிப்புணர்வு பெறவேண்டும் அவரகள் பணி திருச்சபைக்கு மிக அவசியமானது என காலத்தின் அறிகுறியை கருத்திற் கொண்டு பொது நிலையினரை உருவாக்குவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். நற்கருணைப் பணியாளர்கள, இந்தியாயவில் தலைமைத்துவப் பயிற்சி அனுமதித்தது போன்றவை சில எடுத்துக் காட்டுகள். மறைக்கல்விப் பணிக்காகவும் சிறந்த வழிகாட்டல்களும், புதிய மறைக்கல்வி நிலையத்தை அமைத்துத் தந்தமை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எம் சிறார்களின் கல்விக்காகவும் பல முயற்சிகளை மேற்கொண்டவர். இவ்வாறு அவரது பணியின் அடையாளங்கள் நம்மண்ணில் என்றும் மறையாதனவாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

குருத்துவத்தின் நிறைவை, முழுமையைப் பெற்றவர். ஆயர், (க.தி.ம.1562) அதன்படி தமது அழைப்பிற்கு ஏற்ப இறைபணியில் பிரமாணிக்கத்துடன் முழுமையாக உழைத்து இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் எம் அன்புக்குரிய ஆயரை வாழ்த்துவோம். அவர் வழியாக இறைவன் தந்த சகல ஆசீர்வாதங்களுக்காகவும் நன்றி கூறி அவரது ஓய்வு நிலைக்காலத்தில் அவருக்குத் தேவையான உடல், உள, ஆன்மீக நலன்களை நிறைவாகப் பெற்றுக் கொள்ளவும் செபிப்போம். அதேவேளை தொடர்ந்து பணிப்பொறுப்பேற்று வழிநடத்தும் நமது புதிய ஆயர் அதி. வந். கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகைக்கும் இறைவனின் தோழமையுள்ள கரம் துணைபுரியவும் எமது மறைமாவட்டத்தின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் அவர் முன்னெடுக்கும் செயற்பாடுகளில் தோள் கொடுத்து துணைபுரியவும் திடம் கொள்வோம்.

நன்றி: திருமதி. றீட்டா பெர்னாண்டோ, பாலையூற்று

# நன்றி நவில்கிறோம்

**ஆயர் அதி. வண. யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களுக்கு...**

**சொந்த மண்ணே சொர்க்கம் என்று சொல்லாது**
**சோதரராய் கிழக்கு மண்ணில் மாபணி புரிந்து**
**சாதி மத இன பேதம் பாராது சமூக சேவையாளனாகி**
**சவால்கள் பல சந்தித்து சாதனைகள் பல புரிந்த உம்மை**
**வாயார வாழ்த்தி நன்றிகள் பல நவில்கின்றோம்**

**மாண்புக்குரியவராய் மதிப்புக்குரியவராய் மனிதாபமுடையவராய்**
**மக்கள் சேவையையே மனுமகன் சேவையென்று எண்ணி**
**மனவிருப்புடன் மாபெரும் மங்காப்பணி புரிந்து**
**மக்கள் உள்ளமதைக் கொள்ளை கொண்ட உம்மை**
**மனதார வாழ்த்தி நன்றிகள் பல நவில்கின்றோம்**

**இறையன்பின் அமைதியின் இருப்பிடமாய் இரு அறத்தாருக்கும்**
**இறைஇயேசுவின் முன்மாதிரிகையாகி இறைவேண்டலாகி**
**நல்லதொரு நடமாடும் நற்செய்திப் பணியாளனாகி**
**நம்மெல்லோரையும் நல்வழியில் நடத்திய நம்மாயர் அவர்களை**
**நாவார வாழ்த்தி நன்றிகள் பல நவில்கின்றோம்**

**திருமதி. ஜெயவதனி மரியதாஸ் (ஆசிரியை)**
**செல்வநாயகபுரம்**

# புதிய ஆயருடைய இலச்சனை விளக்கம்




புதிய ஆயருடைய இலச்சனை கிறீஸ்தவ மறையைப் பரப்பும் வாளாகச் சிலுவையையும், மறைமாவட்டத் திருச்சபையைப் பாதுகாத்து வழிநடத்தக் கேடயத்தையும் கொண்டுள்ளது. கேடயமானது ஆழ்ந்த கருத்துக்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட அடையாளங்களைத் தாங்கி நிற்கின்றது.

1. பயணம் செய்யும் திருச்சபையாகத் திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபை படகின் மூலம் குறிப்பிடப்படுகின்றது. படகின் பின்னணியில் கிறீஸ்துவே உலகின் ஒளி என்னும் சிந்தனையைத் தருகின்ற சூரியனும், திருகோணமலையை அடையாளப்படுத்துகின்ற மூன்று மலைகளும் அமைந்துள்ளன.

2. கிறீஸ்து தருகின்ற விஷேட அழைப்பை மையப்படுத்துவதாகவும், ஆயரின் மேய்ப்புப் பணிவாழ்வில் வரக்கூடிய சவால்களை அடையாளப்படுத்துவதாகவும் சிலுவை அமைந்துள்ளது.

3. கேடயத்தின் பின்னணி எம் மறைமாவட்டத்தின் பாதுகாவலியான மரியன்னையைக் குறித்துக் காட்டும் இளநீல நிறத்தில் அமைந்திருக்கின்றது.

4. மறைமாவட்டத்தின் பாதுகாவலரான தூய இஞ்ஞாசியாரை அடையாளப்படுத்த IHS எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

5. விசுவாச ஒளியில் புதிய மறைபரப்புப் பணியில் ஈடுபடுவதன் அடையாளமாகவும், கல்விப் பணியின் அடையாளமாகவும் நூல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

6. கேடயத்தில் காணப்படுகின்ற மீன்களும், நெற்கதிர்களும் எம் மறைமாவட்டத்தின் இரு முக்கிய உற்பத்தி மூலங்களான கடற்தொழிலையும், விவசாயத்தையும் குறித்து நிற்கின்றன.

7. ஆயருடைய விருது வாக்கியமான OMNIA OMNIBUS HOMINIBUS **(எல்லோருக்கும் எல்லாமாக 1கொரி 9/22)** இன் மூலம் அனைவருக்கும் இன, மத, மொழி பேதமின்றிப் பணியாற்ற விழைகின்ற ஆயரின் விருப்பத் தெரிவு வெளிப்படுத்தப்படுகின்றது.

இவ்விதமாகப் புதிய ஆயரின் இலச்சனை அவர் தெரிந்தெடுத்த விருதுவாக்கால் வெளிபடுத்தப்படுகின்றது.


# நன்றி நவிலல்




**திருமலை மட்டுநகரின்**
**ஆயராகப் பணியேற்றுப்பணியாற்றி**
**பல நிலைத் தொல்லைகள்**
**கொடுமைகளைக் கண்டவர்**
**வன்முறைகள் கலவரங்கள்**
**சுனாமி அனர்த்தங்கள்**
**இன்னும் இவைபோன்று பல**
**எது எப்படி எனினும்**
**தன்பணியில் சோர்வின்றி**
**முப்பத்திரெண்டு ஆண்டுகளை**
**நிறைவு செய்து ஓய்வு பெறும்**
**ஆயர் மேன்மைமிகு யோசப் கிங்ஸ்லி**
**சுவாம்பிள்ளை ஆண்டகைக்கு**
**எங்கள் மனமார்ந்த நன்றிகள்**
**இறைதுணையோடு தொடர்ந்தும்**
**அவர் நலமுடன் வாழ வேண்டுகிறோம்.**

திருமலைத்தீபம்

# திருகோணமலை மறைமாவட்டம் கப்புச்சின் சபைக் குருக்களை வரவேற்கின்றது



அருட்பணி C. A ஆரோக்கியசாமி Ofm. Cap



அருட்பணி அலெக்ஸ் செல்லையா Ofm. Cap

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ம் பக்கத் தொடர்ச்சி

## புதிய ஆயரின் திருப் பொழிவு

ஆம், திருகோணமலை மறைமாவட்டமே யூன் 3 - 2015 தொடக்கம் இன்பக்களிப்பில் மகிழ்ந்து கொண்டிருந்தது யாவரும் அறிந்த ஒன்று. அதுதான் மேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் என்னும் இறையடியான் ஆயர்த்துவ நிலைக்கு உயர்த்தப்பட்டமை ஆகும்.இவரின் அருட்பொழிவு இம்மாதம் யூலை 25ம் திகதி மாபெரும் கொண்டாட்ட நிகழ்வாக தி/ தூய சூசையப்பர் கல்லூரியில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

தூய மரியாள் பேராலயத்தின் பங்கு மகனாகவும், திரு திருமதி ஜோக்கிம் இம்மானுவேலின் புத்திரனாகிய இவர் இன்று ஆயர்த்துவ நிலைக்கு உயர்த்தப்பட்டமை திருமலை வாழ் மக்களுக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதமாகும்.

"தாய் வயிற்றில் உருவாகுமுன்னே நான் உன்னைத் தெரிந்தெடுத்தேன்" என்ற வாக்குக்கு ஏற்ப இன்று சிறுதுளியாக தன்பணியை ஆற்றி வந்த அதி.வந்தனைக்குரிய ஆயர் கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை பெரும் துளியாக இறைபணியைப் பரந்து விரிந்து பாரெல்லாம் செய்ய இன்னொரு படிக்கல்லாக உயர்த்தப்பட்டுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்.

யூலை 25 அன்று திருமலை நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. அதுதான் நம் ஆயர் திருப்பொழிவு நடைபெறும் நாளாகும். அன்றைய நாளில் ஆயர்கள், குருக்கள், துறவிகள் புடைசூழ Band வாத்தியக் கருவிகள் இசை முழங்க தலைமை ஆயர் அதி.வந்தனைக்குரிய கலாநிதி ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, நம் புதிய ஆயராக் திருநிலைப்படுத்தப்பட விருக்கும் மேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களை பெற்றோர், உற்றார், உறவினர் பவனியாய் அழைத்து வந்த காட்சி யாருடைய மனதையும் நெகிழ வைக்காமல் இல்லை.

எமது மறைமாவட்ட ஆயரால் திருநிலைப்படுத்தப்பட்ட புதிய ஆயர் தமது செய்தியில், தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை இறைவன் துணையுடன் இறைவார்த்தைக்கேற்ப தம் மந்தைகளை நல் ஆயனாகவிருந்து வழிநடத்துவார் எனக் கூறியமையும் திருமலை வாழ் மக்களுக்கு ஓர் ஆனந்தமாக இருந்தது.

"எங்கு நீதி நிலைத்தோங்குமோ அங்குதான் நல்லாட்சி நிலவும்" இது அரசியலுக்கும், திருச்சபைக்கும் நன்கு பொருந்தும். நம் ஆண்டவர் இவ்வுலகில் விட்டுச் சென்ற அமைதியின் அரசை, நீதியின் அரசை எம் புதிய ஆயரும் தனது பணிவாழ்வின் மூலம் வெளிப்படுத்தி உடைந்து போகின்ற திருச்சபையை மீண்டும் கட்டியெழுப்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்தும் நடைபெறும் என எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றோம்.

**"புதிய ஆயரின் பணி நல்ல முறையில் சிறக்க இறையருளும், ஆவியானவர் வல்லமையும் கிடைக்க வேண்டுமென வாழ்த்தி நிற்கிறோம்."**




1ம் பக்கத் தொடர்ச்சி

## புதிய ஆயரின் பதவியேற்பு நிகழ்வு

பின்னர் திருகோணமலை மறை மாவட்டத்திலுள்ள குருக்களும், ஆயர்களும் பவனியாக ஆலயத்திற்குள் வந்து வருகை பாடலின் பின்பு ஓய்வு பெற்ற அதி. வந். யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் புதிய ஆயரை மேற்றிராசன கதிரையில் உட்கார வைத்து செங்கோலும் கொடுத்தார்.

மேலும் குருக்கள், துறவறத்தவர், அருட்சகோதர சகோதரிகள் புதிய ஆயர் அதி. வந். கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை முன்னிலையில் கீழ்படிவதாக வாக்குறுதி அளித்தனர். அதன் பின்பு திருப்பலி புதிய ஆயர் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. புதிய ஆயர் மறையுரையில் விசுவாசத்தோடும் எமது மறைமாவட்டம் என்ற உணர்வோடும் நாம் எல்லோரும் செயல்பட வேண்டும். என்றும் கூறினார். தமிழ் சிங்களம் ஆகிய மொழிகளில் மறையுரையாற்றினார். திருப்பலி முடிவில் புதிய ஆயர் சின்ன வேலையோ பெரிய வேலையோ எதுவென்றாலும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை எல்லோரும் திறம்பட செய்ததால் இந் நிகழ்வு சிறப்பானதாக அமைந்தது என்றும் எல்லோருக்கும் நன்றியும் கூறினார்.

**"எல்லோருக்கும் எல்லாமாக" (1கொரி 9:22)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலைக்கு பெருமை சேர்க்கும் புதிய ஆயர்

அருட்தந்தை கிளமெண்ட் V. அன்னதாஸ்



திருமலை மறைக்கல்வி நடுநிலையம் புதிய ஆயர் பற்றி சில வரிகள் எழுதுங்கள் என்று கேட்டபோது நான் சிந்தித்தேன். என் சிந்தனையில் வந்தது திருமலை மரியாள் பேராலயத்தில் போடப்பட்ட பதாதையிலிருந்த அர்த்தமுள்ள வசனம். 'Then you were our hope, now you are our pride". திருமலை மறைமாவட்ட மக்களின் கனவு நிஜமாகிவிட்டது. "பல மனிதர்கள் வரலாற்றில் உயர்ந்துள்ளனர். சில மனிதர்களால் வரலாறே உயர்ந்துள்ளது. பல நிகழ்வுகள் வரலாற்றில் பிறந்திருக்கின்றன. ஆனால் சில நிகழ்வுகளால் வரலாறே பிறந்திருகின்றன". மண்ணின் மைந்தன், திருமலை மண்ணில் மலர்ந்த முதல் ஆயர் அதி. வந்தனைக்குரிய கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவல் அவர்களின் நியமனம் ஒரு வரலாற்று நிகழ்வு.

39 ஆண்டுகளுக்கு முன்னால் நான் இவரை திருமலை சிறிய குருமடத்தில் ஒரு மாணவனாகச் சந்தித்தேன். "சிவப்பு மனிதனுக்கும் நிழல்கள் கறுப்புதான்இ கறுப்பு மனிதனுக்கும் இரத்தம் சிவப்புதான். வர்ணங்களில் இல்லை வாழ்க்கை உயர்நத எண்ணங்களில் உள்ளதுதான் வாழ்க்கை". உயர்ந்த எண்ணங்களை, நல்வழிகளை தன்னகத்தே இவர் கொண்டிருந்தார். இவர்தான் அன்றைய குருமட Monitor. இவர் அன்றே தலைமைத்துவத்திற்கு வரைவிலக்கணம் எழுதத் தொடங்கிவிட்டார். எதிலும் நீதியை, உண்மையை, நேர்மையை வெளிக்காட்டினார். "இலட்சங்கள் இல்லாமல் ஒருவன் இவ்வுலகில் வாழமுடியும். ஆனால் இலட்சியம் இல்லாமல் ஒருவன் இவ்வுலகில் வாழமுடியாது". இவருடைய இலட்சியப் பாதை இவர் கண்களில் தெளிவாகவே தெரிந்தது.

இந்தியா, திருச்சி தூய பவுல் இறையியல் கல்லூரியில் நாம் ஒன்றாக கல்வி கற்கும்போது எமது பேராசிரியர்களில் ஒருவரான அருட் தந்தை X.D. செல்வராஜ் ஒரு கஷ்டமான குழுவாழ்வு குருத்துவ பயிற்சி முறையை அறிமுகப்படுத்தி விரும்பியவர்கள் பெயர் தாருங்கள் என்று கேட்டபோது, நூற்றுக் கணக்கில் பயின்ற மாணவர்களில் 10 பேர் பெயர் கொடுத்தனர். அந்த பெயர் பட்டியலைப் பார்த்தபோது ஆச்சரியமடைந்தேன். அங்கு நோயல் இம்மானுவேல் என்ற பெயரும் இருந்தது. இவர்கள் தனி இல்லத்தில் வசித்துஇ சமைத்துஇ சைக்கிள்களில் பயணம் செய்து கல்விகற்க குருத்தவ கல்லூரி வந்தனர். "துன்பம் என்பது நம்மை அயர்ந்து தூங்கவைக்கும் தாலாட்டுப் பாடலல்ல மாறாக நம்மை நிமிர்ந்து நிற்க வைக்கும் தேசிய கீதம்". துன்பம், கஷ்டம், துயரம் என்பவற்றைக் கண்டு விலகிச் செல்பவரல்ல இவர். எந்த சவாலையும் சந்திக்க வல்லவர். ஆக குருத்துவ கல்லூரி பயிற்சியிலேயே தன்னை அவர் உருவாக்கிவிட்டார்.

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் அதி வந்தனைக்குரிய முன்னால் ஆயர் கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையினால் முதன் முதலாக திருநிலைப்படுத்தப்பட்ட குருக்கள் மூவர். அந்த வரிசையில் ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் அவர்களும் அடங்குவார். குருவாக திருநிலைப்படுத்திய ஆயர் அந்த குருவை ஆயராக திருப்பொழிவு செய்வது இறைவனது ஆசீர்வாதமாகும்.

ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களை எம்மால் என்றுமே மறக்க முடியாது.

ஒரு குருவாக அருட்தந்தை நோயல் இம்மானுவேல் பணிபுரிந்த கஷ்டமான பணித்தளங்கள் குறிப்பாக ஆயித்தியமலை, அலிகம்பை போன்ற பணித்தளங்களில் இவர் அரும்பெரும் பணி புரிந்தார். ஒரு பழைய CG மோட்டார் சைக்களில் வயல் வரம்புகளில் ஓடி பணிசெய்த காலத்தையும், யுத்த சூழ்நிலையில் மிகவும் பயங்கரமான சூழ்நிலையில் திருக்கோயிலில் வீடுகளில் தங்கியிருந்து பணிசெய்த பணிவாழ்வையும் சற்று திரும்பிப்பார்க்கும் போது இவர் இறை நம்பிக்கையோடு பணிபுரிந்தவர், இவரது அர்ப்பணப் பணி தொடரும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை."முடியும் எனபது மூலதனம் முடியாது என்பது மூடத்தனம்". எதையும் முடியும் என்ற மனநிலையுடன் அரும்பணியாற்றியவர் இவர். "கஷ்டங்கள் மட்டும் நமக்கு இல்லையென்றால் நமக்கு போராடும் எண்ணமே இல்லாமல் போய்விடும்".

ஆன்மீகத்தில் ஆழமான, அடர்த்தியான செறிவான அனுபவம் படைத்த திரு. திருமதி ஜோக்கிம் இம்மானுவேல் குடும்பத்தில் நான்காவது தவப்புதல்வனாகப் பிறந்தவர் இவர். பெற்றோர் எவ்வழியோ பிள்ளைகளும் அவ்வழியே. பெற்றோர் ஒரு மரம் என்றால் பிள்ளை அதன் கனி. பெற்றோர் ஒரு அச்சு என்றால் பிள்ளை அதன் வார்ப்பு. ஆயரை பெற்றெடுத்த பெற்றோரையும், அவரின் சகோதர சகோதரிகளையும் நாம் நெஞ்சார வாழ்த்த வேண்டியது எமது பொறுப்பாகும்.

**"எல்லோருக்கும் எல்லாமானேன்"** என்ற இவரது விருது வாக்கு மிகவும் ஆழமான கருத்துச் செறிவு கொண்டது. இது ஒரு சவால். "விடியும் என்று விண்ணை நம்பு, முடியுமென்று உன்னை நம்பு, அனைத்திற்கும் மேலாக இறைவனை நம்பு," நம்பிக்கையுடன் இவர் பணி சிறக்க நாம் செபிப்போம்."அன்பை மட்டும் கடன்கொடுங்கள் அது அதிக வட்டியுடன் உங்களுக்கு திரும்ப கிடைக்கும். என்றார் அன்னை தெரேசா. இவரது அன்புப்பணி சிறக்க தினமும் செபிப்போம். "வாழ்வில் கோழையாக இறப்பதற்கு ஒரு நொடிச் துணிச்சல் போதும். ஆனால் துணிச்சலோடு வாழ்வதற்கும், மற்றவரை வாழ வைப்பதற்கும் ஒவ்வொரு நொடியும் துணிச்சல் வேண்டும்". ஒவ்வொரு நொடிச் துணிச்சலுக்கும் இறைவனை வேண்டுவோம்.

இறுதியாக அமரர் அப்துல் கலாமின் அர்த்தமுள்ள வார்த்தைகளோடு எனது வரிகளை முடிக்கின்றேன். "ஒரு நல்ல புத்தகம் நூறு நல்ல நண்பர்களுக்குச் சமம். ஆனால் ஒரு நல்ல நண்பன் ஒரு நூலகத்திற்கே சமம்." நீங்கள் உங்களது நட்பினால் அன்பினால் பணியினால் பலரை மாற்றியுள்ளீர்கள். "அழகைப்பற்றி கனவு காணாதீர்கள் அது உங்கள் அழகை பாழாக்கும். ஆனால் உங்கள் கடமையைப்பற்றி கனவு காணுங்கள். அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்." கடமைக்கு முதலிடம் கொடுத்த நீங்கள் ஆயர் பணியிலும் அது தொடர வாழ்த்துகின்றோம். "ஒரு முறைவந்தால் அது கனவு. இரு முறை வந்தால் அது ஆசை. பலமுறை வந்தால் அது இலட்சியம்". உங்கள் இலட்சியம் நிறைந்த பணிவாழ்வு சிறக்கட்டும். திருத்தந்தை பிரான்சிஸ் ஆயர்களுக்கு கொடுக்கும் அறைகூவலுக்கு செவிமடுத்து இறைவனின் பாதையில் உங்கள் அன்புப் பணி தொடர வாழ்த்துகிறேன்.

# அன்றும் இன்றும் என்றும் அன்னை மரியாள்

## அவள் ஓர் கன்னிமரியாள்

JK. பிரசன்னா- மட்டுநகர்

தூய சுவக்கீனுக்கும், தூய அன்னம்மாளுக்கும் பிறந்த குழந்தையே அன்னை மரியாள். இவர் ஜெருசமேிலே கி.மு.21ல் பிறந்ததாக அறிய முடிகிறது. மரியாளின் வாழ்வைப் பற்றி நாம் பேசும்போது அவரின் பிறப்போடு தொடங்குவதற்குப் பதிலாக அவள் தாயின் வயிற்றில் உருவானதிலிருந்து தொடங்குவதே பொருத்தமானது. தன் தாயின் வயிற்றில் இருக்கும்போதே அவர் மற்ற அனைத்துப் புனிதர்களின் புனிதத்தை விட மேன்மையான புனிதையாக இருந்தார் என்று தூய அமிர்தநாதர் கூறுகிறார். கருவான முதல் நொடியிலிருந்தே சிறப்புமிகு புனித மாட்சியால் அணிசெய்யப்பட்டிருந்த நாசரேத்தூர்க்கன்னி என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் மரியாளை வர்ணிக்கிறது.

யூத முறைப்படி குழந்தை பிறந்து 80ம் நாள் அவளை அவளது பெற்றோர் ஜெருசலேம் கோயிலில் ஒப்புக் கொடுத்தனர். அப்போது அவருக்கு "மரி" என்று பெயரிடப்பட்டது. எபிரேய மொழியில் "மரியம்" என்னும் அவள் பெயர் "நமது அழகுள்ளவள்" என்றும், இலத்தீன் மொழியில் "கசப்பான கடல்" என்றும், சீரிய மொழியில் "ஆண்டவர்" என்றும் பொருள்படும். மூன்றும் மரியன்னையின் வாழ்வை எமக்கு சுருக்கமமாக விளக்குகின்றது.

மரியாள் தமது இளமைப் பருவத்திலேயே ஜெருசலேமிலே தான் இருந்தார். பின்பு தூய சூசையப்பருக்கு மண ஒப்பந்தமான காரணத்தால் மரியாளை நாசரேத்து என்னும் ஊரில் காண்கிறோம். அந்நாட்களில் சூசை என்னும் நீதிமான் ஒருவர் வாழ்ந்தார். இவர் பெத்லகேமைச் சார்ந்தவர். இவருக்கும் மரியாளுக்கும் மணஒப்பந்தம் நடைபெற்ற இடம் ஜெருசலேம் எனக் கருதப்படுகிறது.

மரியாள் கருவுற்று மூன்று மாதத்திற்கு மேலாயினும் இந்நிகழ்ச்சி பற்றி தனக்கு மண ஒப்பந்தமாயிருந்த் சூசையிடம் மரியாள் கூறவில்லை. ஆனாள் அவள் தூய ஆவியால் கருத்தாங்கியிருப்பது சூசைக்குத் தெரிய வந்தது. மரியாளைக் காட்டிக் கொடுக்க மனமில்லாது மறைவாக விலக்கி விடத் தீர்மானித்தார் சூசை. வானதூதர் கனவில் தோன்றி மரியாளைப் பற்றிய உண்மைகளைக் கூறினார். பின்னர் சூசை கற்பவதியாயிருந்த மரியாளையும் கூட்டிக்கொண்டு நாசரேத்தூரை விட்டு பெத்லகேமை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் அங்கிருந்த போது மரியாளுக்குப் பேறுகாலம் வந்தது. சூசை பெத்லகேமைச் சேர்ந்தவர். அங்கு அவருக்கென ஒரு வீடு இருந்தது. ஆனால் பெயரைப் பதிவு செய்ய பலர் அங்கு வந்திருந்தமையால் பிரசவத்திற்காக மாட்டுத் தொழுவத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு மரியாள் தம் தலைப்பேறான மகனைப் பெற்றெடுத்தார். இயேசு பிறந்த இடம் ஒரு குகை என்று இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜஸ்டீன் முதல் இன்று வரை நம்பப்பட்டு வருகின்றது. அந்தக் குகையின் மேல் இன்று ஒரு பிரமாண்டமான கோயில் இருக்கின்றது. மரியாளின் குழந்தை பிறந்த எட்டாம் நாள் குழந்தைக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டு "இயேசு" என்னும் பெயரிடப்பட்டது. இயேசு என்னும் வார்த்தைக்கு "மீட்பர்" என்னும் பொருள்படும். யூத முறைப்படி குழந்தையைத் தாய் மரியாளும் சூசையும் ஜெருசலேமிற்கு குழந்தையைப் பற்றியும், தன்னைக் குறித்தும் கூறியவற்றைக் கேட்டு மரியாள் வியந்தார்.

தொடரும்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி - 12
## தூய யோவான் நற்செய்தி
## அதிகாரம் 19 - 21

**அன்பார்ந்த வாசகர்களே**

"விடுபட்ட எழுத்துப்புதிர்" போட்டியானது விவிலியத்தில் குறிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி விடுபட்ட சொற்களை அல்லது வசனங்களை விவிலியத்தில் கண்டுபிடித்து கீழே தரப்பட்ட கட்டங்களுக்குள் முதல் எழுத்துக்கு அமைவாக கண்டுபிடிக்க முடியும். இப்படிவத்திலே விடைகளை எழுதி அனுப்பவும் குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படும்.
1ம்பரிசு 500/=, 2ம்பரிசு 300/=, 3ம்பரிசு 200/=, அனுப்ப வேண்டிய முகவரி :

**விடுபட்ட எழுத்து புதிர் போட்டி 11. திருமலைதீபம் 297 டொக்கியாட் வீதி, திருகோணமலை.**
**அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 31. 08. 2015**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ | | | | | | க | | | |
| ■ | தி | | | | | | | இ | ■ |
| ■ | | பு | | | க | | | | செ |
| | | ■ | ந | | நூ | ■ | மு | ■ | |
| | | | | | | | | வெ | |
| | இ | | | | | | | | |
| | | | | | | | | | மே |
| | | | | | | | | | |
| | | | | வி | | பே | | ■ | |
| தோ | ■ | இ | | | | | மீ | ■ | |

1. செ.......நிற மே.....டையை 2. இதோ ம......த......
3. இ.....ரே உம் தா....... 4. திராட்........இர....... ........
5. மு......பது கி......... 6. பு.......ய கல்.........றை
7. வெ.........ணா......... 8. தோ.......டக் கா.........ர்
9. ஆண்.......வ.........க் க........டோம் 10. ந.......ப மா......டே......
11. விடி.......ற் கா....... 12. மீ.......கள் 13. நூ.........
மீ.......டு....... 14. பே....... வளர்

பெயர் .................................................
முகவரி ...............................................
பங்கு .................................................

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 10
## தூய யோவான் நற்செய்தி
## அதி 09 - 13

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ந | ■ | கோ | து | மை | ம | ணி | ■ | ■ | லோ |
| று | க | ■ | ந | பி | கு | ■ | ■ | நா | வா |
| ம | ண் | ழா | ல் | ற | க் | ப | க | மு | ம் |
| ண | ணீ | வி | ல | வி | வா | ண | ன் | ம் | சீ |
| த் | ர் | ண | ஆ | யி | ல் | ப் | ம | செ | ■ |
| தை | வி | ப | ய | லே | நூ | பை | ட | ல் | சை |
| ல | ட் | ப் | ன் | யே | றை | ■ | னி | வோ | ச் |
| ம் | டு | ர் | நா | ■ | ம | ■ | மா | ம் | மி |
| ■ | ■ | அ | னே | ■ | வை | ர் | பா | ■ | லா |
| ப | ந் | தி | யி | லி | ரு | ந் | து | ■ | இ |

1. சீலோவாம் 2. நல்ல ஆயன் நானே
3. அர்ப்பண விழா 4. நறுமணத் தைலம்
5. கண்ணீர் விட்டு 6. இலாமிச்சை 7. கோதுமை மணி
8. பணப்பை 9. பிறவியிலேயே 10. பந்தியிலிருந்து
11. மறைநூல்வாக்கு 12. நாமும் செல்வோம்
13. மானிட மகன் 14. பார்வை

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.**

### பரிசுக்குரியவர்கள்:-

**1ம் பரிசு 500/=**
செல்வி. கரோலினி கீர்த்திகா
57 தபால் நிலைய வீதி
திருகோணமலை

பங்குபற்றியோர் - 62பேர்
சரியானவிடையளித்தோர் - 41பேர்

**2ம் பரிசு 300/=**
மா. பற்றிமா
422 பாரதி புரம் கன்னியா
வீதி, திருகோணமலை

**3ம் பரிசு 200/=**
N.S நிர்மலின்
70/10 வேளாங்கண்ணி வீதி
பாலையூற்று

### பாராட்டுக்குரியவர்கள்

1. ம. கீர்த்திகா - பேராலயம்
2. G. டிவசன் - பாலையூற்று
3. J.D. யூட்ஸ் பிறைனி - இலிங்கநகர்
4. ஆன் வஜிரா R.F - பேராலயம்
5. N. பிறைடன் - பள்ளத்தோட்டம்
6. அ. செல்டன் - இலிங்கநகர்
7. பியூலா டானியலா R.F - பேராலயம்
8. யே. தர்மிக்கா - மூதூர்
9. ச. கன்சிஹா - நிலாவெளி
10. அ. மேரி றஜிதா - முல்லைத்தீவு
11. எ. லினா சிஜேனி - நிலாவெளி
12. ம. விவியானி - பாலையூற்று
13. த. ரதிஸ்ராஜ் - அன்புவழிபுரம்
14. கரல்ட் பிரணவன் - பேராலயம்
15. தே. லக்ஷிக்கா - கும்புறுபிட்டி
16. தே. ஆன் நியோமி - பேராலயம்
17. டெ. சனோஜ் அன்ரனி - உவர்மலை
18. சை. பிரின்சி செரின் - பேராலயம்
19. டெ. இவேஞ்சலின் - உவர்மலை
20. மார்டின் றோய் - அன்புவழிபுரம்
21. டே மெருஷியன் பிள்ளை - உவர்மலை
22. சு. எமில் ராஜ் - செல்வநாயகபுரம்
23. ட. ரக்ஷனா - உவர்மலை
24. ச. டே. வேறன் பிள்ளை - உவர்மலை
25. N. கெனாஸ்ரி - பள்ளத்தோட்டம்
26. P. டிலக்சினி - முல்லைத்தீவு
27. N.S பிறீட்டி - பள்ளத்தோட்டம்
28. ஜெ. ஆன் பிறினித்தா - முல்லைத்தீவு
29. த. மெரின்டன் - இலிங்கநகர்
30. டிரோன் ஜான்சி - உவர்மலை
31. ப. சுவேதா - இலிங்கநகர்
32. S. சிங்கராசா - இலிங்கநகர்
33. ச. மெ. கிரிஷாந்தினி - இலிங்கநகர்
34. F. தெனிஸ் ஜோய் - இலிங்கநகர்
35. F. ஆன் பிறிசில்டா - இலிங்கநகர்
36. F. கயசிந் - இலிங்கநகர்
37. தே. சமிஸ்டன் - நிலாவெளி
38. A.G சாதனா - மன்னார்
39. L.S பியூரா - பேராலயம்

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி எண் ~ 19
## யோசுவா 13 ~ 24
## அதிகாரங்கள்

1. யோசுவா இஸ்ரயேல் குலங்களை எங்கு ஒன்று கூட்டினார்?
விடை.................................................
2. "கிலயாது" என்பதன் எபிரேயப் பொருள் யாது?
விடை.................................................
3. மோசேயின் திருச்சட்ட நூலில் எழுதப்பட்டுள்ள அனைத்தையும் ............................ தில் கவனமாய் இருங்கள்.
4. இஸ்ரயேல் மக்கள் லேவியருக்கு இந் நகர்களையும் ......................யும் அளித்தனர்.
5. யோசுவா யாருடைய மகன்?
விடை.................................................
6. யோசுவாவுடன் வந்தவர்களில் மக்களின் இதயத்தை அச்சத்தால் நடுங்கச் செய்தவர்கள் யார்?
விடை.................................................
7. இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரே ............................ குலத்தின் உடைமை?
8. எஞ்சிய நிலத்தைப் பங்கிடுவதற்காக இஸ்ரயேல் மக்களின் கூட்டமைப்பு முழுவதும் எங்கு ஒன்று கூடியது.
விடை.................................................
9. ஐந்தாவது சீட்டு எந்த குலத்திற்கு விழுந்தது?
விடை.................................................
10. நூனின் மகன் இறக்கும் போது வயது?
விடை.................................................

பெயர் .................................................
முகவரி ...............................................
பங்கு .................................................
அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 31. 08. 2015

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி எண் ~ 17
## இணைசட்ட நூல் (26~34 அதிகாரங்கள்)
## விடைகள்

1. அவருடைய கட்டளைகளை (26:18)
2. மோவாபு (29:01)
3. உன் வாயில், உன் இதயத்தில் (30:14)
4. வாழ்வை/நன்மையை/சாவை/தீமையை (30:15)
5. சந்திப்பு கூடாரத்துக்கு (31:14)
6. யோசுவா (31:23)
7. லேவியருக்கும்/அன்னியருக்கும்/ அனாதைக்கும்/ கைம்பெண்ணுக்கும்/ (26:12)
8. நேரியவன் (32:15)
9. 120 (34:07)
10. ஓர் என்னும் மலையில் (32:50)

**பங்குபற்றியோர்: 42 பேர்**
**மிகச்சரியான விடையளிததோர்:10 பேர்**

**பங்குபற்றிய அனைவருக்கும் பராட்டுக்களும் நன்றிகளும்**

### பரிசுக்குரியவர்கள்

**1ம் பரிசு 500/=**
செல்வன் அமலதாசன் டேர்வின்
34,B அன்புவழிபுரம்
பாலையூற்று

**2ம் பரிசு 300/=**
செல்வன் ச. அருள்ராஜ்
3ம் வட்டாரம்,
நிலாவெளி

**3ம் பரிசு 200/=**
செல்வி வீ விமன்சியா
3ம் வட்டாரம்
நிலாவெளி



### பாராட்டுக்குரியவர்கள்

1. செல்வின் எம். ஆர். விமலதாஸ் நிலாவெளி

**குறிப்பு:** இரண்டு போட்டிக்குரிய பரிசுக்குரியவர்களின் பரிசுத் தொகையை அவர்களது பங்குத் தந்தையிடம் பெற்றுக் கொள்ளலாம்.

## மறைக்கல்வி கற்போம் ~ 09

01. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சனத்தொகையில் கத்தோலிக்க மக்களின் எண்ணிக்கை அண்ணளவாக எவ்வளவு?
**19,606**

02. கருதினால் என்பவர் யார்?
**திருத்தந்தையோடு இணைந்து திருச்சபையை வழிநடத்த திருத்தந்தையால் நியமிக்கப்படும் ஆயர் புதிய திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் பணியில் இவருக்கு முக்கிய பங்குண்டு (திச 349)**

03. அன்பியம் என்றால் என்ன?
**அன்பியம் என்பது நற்செய்தி மதிப்பீடுகளின் அடிப்படையில் அன்பை வாழ்வாக்க முனையும் திருச்சபையின் அடித்தள கிறிஸ்தவ சமூகம்**

04. தூய கன்னி மரியாளின் விண்ணேற்பு எப்போது கொண்டாடப்படுகின்றது?
**ஆவணி 15**

05. அன்னை மரியாள் அரசியாக முடிசூட்டப்பட்ட நாள் எப்போது?
**ஆவணி 22**

06. திருமுழுக்கு யோவானின் பாடுகளின் நினைவு நாள் எப்போது?
**ஆவணி 29**

07. திருமுழுக்கு யோவானின் உணவாக உட்கொண்டவை எவை?
**காட்டுத்தேனும், வெட்டுக்கிளியும்**


08. திருத்தந்தை அண்மையில் வெளியிட்ட திருத்தூது மடலின் பெயர் என்ன?
**இறைவா உமக்கே புகழ்**

09. "இறைவா உமக்கே புகழ்" என்ற சுற்றுமடல் எதனை வலியுறுத்துகின்றது?
**இறைவனின் படைப்புக்களை நாம் பாது காக்க வேண்டும் என்பதனை**

10. மோசேயின் பாடல் காணப்படும் நூல் ?
**இணைச்சட்டம் 32**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்குளம்
# தூய அந்தோனியார் ஆலய புனருத்தாரனம்





# குருத்துவ வாழ்வில் வெள்ளி விழா காணும் அருட்பணியாளர்கள்

04.08.2015

21.07.2015

Admoltus
Annos Vivat
25



அருட்பணி S.A. அந்திரியாஸ்
A. பேர்ணாண்டோ அமதி
தேசிய கல்வி நிறுவகம் மகரகம
(முன்னாள் மறைக்கல்வி இயக்குனர்
திருமலை)



அருட்பணி பியால் ஜானக்க
பேர்ணாண்டோ
தேசிய மறைக்கல்வி இயக்குனர்

இறைவனது பணிக்கென தங்களை இணைத்து இறை துணையுடன் தங்களது பணியைச் செய்து 25வது வருடத்தில் காலடி எடுத்து வைத்திருக்கும் அருட்பணியாளர்களுக்கு எமது இதயம் கனிந்த வாழ்த்துக்களும் இறையாசீர்களும் உரித்தாகுக.

இயக்குனர், பணியாளர்கள்
திருமறைக்கல்வி நடுநிலையம்
திருகோணமலை

## இணைபிரியா இல்லறவாழ்வில்
## 50ஆவது ஆண்டு நிறைவு விழா வாழ்த்து



07.08.1965 – 07.08.2015

திரு. திருமதி. ஜோசப் செல்லத்துரை, சந்தனமேரி
(இல.61,நித்தியபுரி,உப்புவெளி,திருகோணமலை)

"திருமணத்தில் அடங்கியுள்ள மறைபொருள் பெரிது
இது திருச்சபைக்கும் கிறிஸ்துவுக்கும்
பொருந்துவதாகக் கொள்கிறேன்" (எபே.5:32)

இணைந்து வாழ்ந்திடுக!
இன்னும் பல நூறாண்டு!
நல்லறம் புரிந்திட இல்லறம் புகுந்து
நானிலம் போற்றிட நலம் பல கண்டு
வள்ளுவன் சொன்ன வாழ்நெறி வழுவாது
வாழ்ந்த காலங்கள் வனப்புற அமைந்து
போற்றுதற்குரிய பெருமைமிகு வாழ்வில்
பொன்விழாக் காணும் புகழுறு தம்பதியர்
இறை ஆசி பெற்று, இல்லற வாழ்வில்
இணைந்து கழித்திட்ட ஆண்டுகள் ஐம்பது
உலகில் வானும், நிலவும் வலம்வரும் நாள் வரை
உயர்வுறு நலங்கள் யாவையும் பெற்று
இன்பமுடன் இன்னும் பல்லாண்டுகள்
ஈடிணையற்று வாழ வாழ்த்துகிறோம்.
வாழ்க நலமுடன்! வாழ்க வளமுடன்!
வையகத்தில் வளர்க உங்கள் வாழ்வு.

வாழ்த்துக்கள் கூறும்!
அன்புபிள்ளைகள்,
பாசமுள்ள மருமக்கள்,
பிரியமுள்ள பேரப்பிள்ளைகள்

# ஆயர் குழுவில் இணைந்து கொண்ட திருமலை மண்ணின் முதல் ஆயர்

திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபை வரலாற்றில் 25.07.2015 ஆம் திகதி வரலாற்றுச் சிறப்பு மிக்க ஓர் நன்நாள்.திருமலை மண்ணில் மலர்ந்த முதல் ஆயர் அதிமேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையின் திருநிலைப்படுத்தும் சடங்கு நடைபெற்ற பொன்நாள். தி/ தூய சூசையப்பர் கல்லூரி மைதானத்தில் வெகு விமரிசையாக காலை 8.30 மணிக்கு நடந்தேறியது.

பிரமாண்ட மேடை அலங்காரத்துடன் நடைபெற்ற இந்நிகழ்வைக் காண பாரிய பார்வையாளர் மண்டபங்கள் கல்லூரி மைதானத்தை ஆக்கிரமித்திருந்தது. பார்வையாளர் நிறைந்த சனக்கூட்டம். ஒரு பகுதி குருமாருக்கும், இன்னொரு பகுதி அருட் சகோதர சகோதரிகளுக்கும், இன்னொரு பகுதி விசேட விருந்தினர்களுக்கும் பகுதி பகுதியாக ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தியா, சிங்கப்பூர் போன்ற இடங்களிலிருந்தும் பிரமுகர்கள் வருகை தந்திருந்தனர்.

தூரத்தில் இருப்போர் நடப்பதை நன்கு அவதானிக்க LED அகன்ற மூன்று திரை மூலம் பார்ப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டிருந்தது. இதனால் மக்கள் பார்ப்பதற்கு முண்டியடிக்காமல் ஒழுங்காக அமைதியாக பார்த்து மகிழ்ந்தனர். சிறப்பான திட்டமிடலுக்கு இந்நிகழ்வு ஒரு உதாரணம். அப்பப்பா இத்தனை ஆடம்பரமான ஏற்பாடுகளுடன் இவ்வாறான நிகழ்வை நான் வாழ்க்கையில் திருகோணமலையில் பார்த்ததேயில்லையென பிரமித்து நின்றோர் எத்தனை பேர். இந்நிகழ்வுக்கு வந்தோர் அனைவரும் மலைத்து நின்றனர்.

அன்று காலை இந்நிகழ்வை கண்டுகளிக்க சுமார் பத்தாயிரம் கண்கள் பக்திப் பரவசத்துடன் காத்திருந்தனர். சூரிய வெப்பம் கடுமையாக இருக்கும் என்று எதிர்பார்த்த போதிலும் வானம் மப்பும் மந்தாரமுமாக காணப்பட்டமையால் மக்களை வெப்பக் கொடுமையில் இருந்து இறைவன் காத்தமையும் குறிப்பிடத்தக்கது.

"உங்களுள் தலைவராக இருக்க விரும்புகிறவர்கள் பணியாளர்களாக மாறட்டும்" என்ற இயேசுவின் திருவார்த்தைக்கேற்ப திருநிலைப்படுத்தப்பட்ட புதிய ஆயர் திருமறை வாழ்வில் தம் பணியை ஆற்றிட திருப்பொழிவு நிகழ்வில் கலந்து கொண்ட பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதி யின் முன்னிலையில் மணிகள் ஒலிக்க ஆயர்களுடன் பவனி ஆரம்பமாகியது.

தலைமை ஆயர் பேரருட்திரு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையுடன் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையுடன், காலி மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு றேமன்ட் விக்கிரமசிங்க ஆண்டகையுடன் இணைந்து ஏனைய ஆயர்கள் புடைசூழ ஆயரைத் திருநிலைப்படுத்தும் சடங்கு மிக கோலாகலமாக நடைபெற்று முடிந்தது.

திருநிலைப்படுத்தப்பட்ட ஆயர் கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையை சக ஆயர்கள் சமாதான முத்தம் கொடுத்து ஆயர் குழுவில் இணைத்துக் கொண்ட அக்காட்சி கண் கொள்ளாக் காட்சியாக காணப்பட்டது.

அதேவேளை ஓய்வு பெறும் ஆயர் அதி வந் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையின் சாதனைகளையும் அவர் சந்தித்த சவால்களையும் நினைத்து பெருமைப்பட்ட உள்ளங்களும் இல்லாமல் இல்லை. ஓய்வு பெறும் ஆயரை நினைத்து அழுத உள்ளங்களும் ஏராளம். அதேவேளை புதிய ஆயரை வரவேற்கும் மகிழ்ச்சியில் இருந்த அதே உள்ளங்களின் இருநிலை திரிசங்கு நிலையையும் மைதானத்தில் நின்ற மக்கள் வெள்ளத்தில் அவதானிக்கக் கூடியதாகவும் இருந்தது.

திருகோணமலை மறைமாவட்ட மக்களுக்கு இந்நிகழ்வு ஒரு புதிய அனுபவம் என்றால் மிகையாகாது.

திரு. ஜோ. நோமன் பல்தசார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org